ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வகுளமாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்

வெளிவரும்

ஓர் தமிழ்ப் பத்திரிகை.

ஒன்றாந்தொகுதி.

Vol. I.

தாது — ஈசுவர வருஷம்.

1937-38.

பத்திராசிரியர் :—ஆர். கேசவய்யங்கார், M.A., B.L.,

அட்வோகேட்.

# ஒன்றாந்தொகுதி உள்ளுறை.

:(o):


| விஷயம். | எழுதியவர். | பக்கம். |
|---|---|---|
| வகுளமாலை | பத்திராசிரியர். | 1 |
| கல்வழி விளக்கு. | ,, | 17 |
| சடகோப தத்துவம். | ,, | 37, 57 |
| மாறனடி மெய்ம்மை. | ,, | 81, 107 |
| தருமத்திட்பம். | ,, | 124, 150 |
| வருணப்பான்மை. | ,, | 165, 186 |
| ஓர் பெரியார் பிரிவு. | ,, | 115 |
| வேதாந்த தேசிகரூசல். | ,, | 100 |
| குருபரம்பரை. | ,, | 195 |
| நம்மாழ்வார் வைபவம். | ஸ்ரீ உபவே பண்டிதபூஷணம் தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசார்ய ஸ்வாமி. | 5 |
| நெடியோன் குன்றம். | ஸ்ரீ உபவே மூ. இராகவையங்கார் ஸ்வாமி. | |
| பாமாலை. | ஸ்ரீ உபவே பகவத் விஷயம் வி. நரஸிம்மாசாரியார் ஸ்வாமி. | 22 |
| திருவாய்மொழி அநுபவம். | ஸ்ரீ உபவே அட்வொகேட் ஏ. வி. கோபாலாசாரியார் ஸ்வாமி. | 26, 44, 90, 112, 129, 153, 174, 198 |
| மாரனை வென்ற மாறன். | ஸ்ரீ உபவே திருவாலி அ. இராமாநுஜாசாரியார் ஸ்வாமி. | 11 |
| விக்கிரஹ ஆராதனையை விளக்கும் வேதவாக்கியங்கள். | ,, | 28 |
| சிற்றின்பமும் பேரின்பமும். | ஸ்ரீ உபவே கம்பராமாயணம் ஆர். சந்தானகிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி. | 12 |
| சிற்றின்பச் சிறுமையும் பேரின்பப்பெருமையும். | ,, | 30 |
| பேரின்பமெய்துவதெங்கனம்? | ,, | 93 |

| விஷயம். | எழுதியவர். | பக்கம் |
|---|---|---|
| பன்மணித்திரள். | ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்காரவர்கள். | 14, 53, 96, 121 |
| வர்த்தமானங்கள். | ,, | 34, 49, 97 |
| பார்ப்பனியும் பாண்டியனும். | ,, | பகுதி 3 அட்டை உட்பக்கம். |
| நெல்லிக்கனியின் விந்தை | ,, | 55 |
| பாரோர் பாக்கியப் பார்ப்பனச் சிட்டர். | ,, | 116 |
| புரட்டாசிக்கேட்டைதன்னிற் புவியுதித்தோன். | ,, | 132 |
| ஐப்பசியில் திருமூலத்தவதரித்தான். | ,, | 159 |
| கம்பர் திருநாட்கொண்டாட்டம். | ,, | .65 |
| துண்டு துணுக்குகள். | பாரத்வாஜி. | 32, 53, 64, 95, 163 |
| வேதாந்தவாரியன். | ,, | 131 |
| முதலாழ்வார்கள். | ,, | 162 |
| திருப்பாணாழ்வார். | ,, | 177 |
| ஸ்ரீ வகுளபூஷண பாஸ்கரோதயம். | ஸ்ரீ உபவே ஸ்ரீ அநந்தகிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி. | 47 |
| அடியேன் அநுபவித்த வண்ணம். | ஸ்ரீமான் வி. யம். ஷண்முகசுந்தர முதலியாரவர்கள். | 119 |
| திருப்பாவை விளக்கும் திருப்பாவலர். | ஸ்ரீமான் யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள். | 120 |
| திவ்யப்ரபந்த நிபுணரான தில்லையம்பூர் ஸ்வாமி. | ஸ்ரீமான் சுந்தரசேகரர் அவர்கள். | 120 |
| புரட்டாசிப்பூராடம் புவிவந்தோன். | மாடபூசி. | 135 |
| அபிநந்தனம். | ஸ்ரீ உபவே தில்லையம்பூர் சக்ரவர்த்தி வெங்கடாசார் ஸ்வாமி. | 153 |
| காலஞ்சென்ற சக்ரவர்த்தியாசார் ஸ்வாமி. | ,, | 156 |
| ஸ்ரீ தில்லையம்பூர் ஸ்வாமியின் வியோகம். | ஸ்ரீமான் வி. கிருஷ்ணசாமி. | 158 |

| விஷயம். | எழுதியவர். | பக்கம். |
| --- | --- | --- |
| மதிப்புரை. | | பகுதி 2, அட்டை உட்பக்கம். |
| தனிப்பாடல். | தமிழன்பன். | 80 |
| எதிராசரந்தாதி. | | A பகுதி 4 |
| ,, | | B பகுதி 5 |
| ஹாஸ்யத் துணுக்குகள். | விநோதன். | 123 |
| தேசிகர் நூற்றந்தாதி. | | 136 |
| திருத்தாடாளன் பெருமை அல்லது வாமந வைபவம். | ஸ்ரீஉபவே குறிச்சி சே. ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார் ஸ்வாமி. | 179 |
| முக்கிய அறிவிப்பு. | மானேஜர். | 185 |


# வேண்டுகோள்.

இந்தப் பகுதியுடன் வகுளமாலையின் ஒன்றாந்தொகுதி முற்றுப்பெறுகிறது. சந்தாதாரர்களனைவரும் கூடிய சீக்கிரத்தில் அடியிற்கண்ட விலாசத்திற்கு இவ்வருடத்திய (1937) சந்தாத்தொகையை அனுப்புவதுடன் இனி வரப்போகும் இரண்டாந்தொகுதி முதற்பகுதியை அன்புடன் வரவேற்று வேண்டிய ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது இம்மாதிரியான மாதப்பத்திரிகையை நம்மவர்கள் விசேடமாக அபிமானித்து ஆதரிக்கவேண்டுமென்ற விஷயம்பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. வருடச்சந்தா ரூபா ஒன்று மிகவும் குறைவாக உள்ளதால் தாமதியாது அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.


தேசிகர் நூற்றந்தாதி ... தனிப்புத்தகம் விலை அணா ஒன்று.


ப. ரெ. திருமலை ஐயங்கார்,
மானேஜர், "வகுளமாலை",
திருவல்லிக்கேணி.

REGD. No.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வ கு ள மா லை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே" — வகுளாபரணர்.

"அகரமுதல வெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றே யுலகு"
"தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றலரிது" — திருவள்ளுவர்.

"உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே" — கம்பர்.

தொகுதி 1 } தாது வருஷம் தை மாதம். { பகுதி 1
Vol. 1 } JANUARY 1937. { No. 1

## உள்ளுறை.


| | | | |
|---|---|---|---|
| 1. | வகுளமாலை. | பத்திராசிரியர். | 1 |
| 2. | நம்மாழ்வார் வைபவம். | ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே பண்டித பூஷணம் தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசார்யஸ்வாமி. | 5 |
| 3. | நெடியோன் குன்றம். | ஸ்ரீ உபவே மு. இராகவையங்கார் ஸ்வாமி | 8 |
| 4. | மாரனைவென்ற மாறன். | ஸ்ரீ உபவே திருவாலி அ. இராமநுசய்யங்கார் ஸ்வாமி. | 11 |
| 5. | சிற்றின்பமும் பேரின்பமும். | ஸ்ரீகாழிச்சீராம விண்ணகரம் ஸ்ரீ உபவே கம்பராமாயணம் ஆர். சந்தானகிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி. | 12 |
| 6. | பன்மணித்திரள். | ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்காரவர்கள். | 14 |


பத்திராசிரியர் :— ஆர். கேசவய்யங்கார், M.A.B.L., அட்வகேட்.

வருஷம் 1-க்கு ரூ. ஒன்று.] [தனிப்பிரதி அணா ஒன்றே.

## சாற்றுக்கவிகள்.

வந்த வள்ளலும் வகுளமாலை யான்
தந்ததமிழினைத் தானுமோதியே
முந்தை நான்மறை முடிபுமீதெனச்
சிந்தை தேர்வுறச் செட்டர்க்கருளுவார். (1)
குருகாபதி பூங்கழல் கும்பிட
வருமோவரு வல்வினை நம்மிடை
திருமாமகள் நோக்குறலன்றியும்
வருமாதவன் வானம் வழங்குமே. (2)
நாதன் பாதுகம் நாரணன் பாதுகம்
ஓதன் பாதுகம் ஓங்குயர் பாதுகம்
பூதன் பாதுகம் பூங்கமழ் பாதுகம்
தாதன் பாதுகம் தாரணி காத்ததே. (3)
துறவிகட்கிறையவன் றாயதாளிணை
பிறவியறுத்திடுமென்ற பெட்பினால்
அறவழி நின்றருளம்மா முனிவனும்
பிறவழியகற்றியே பீடுபெற்றனே. (4)

— அடியார்க்கடியன் —

**பண்டைத்தமிழர் மதம்:** சங்கமருவிய தொகை நூற்கள் மூன்றனுள் ஒன்றாகிய பதினெண் கீழ்க்கணக்கிற் சேர்ந்தவை திரிகடுகமும் நான்மணிக்கடிகையும். இவற்றை இயற்றியவர் முறையே நல்லாதனார், விளம்பிநாகனார் என்ப. முன்னவர் "கண்ணகன் ஞால மளந்ததூஉங் காமருசீர்த் தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉ நண்ணிய, மாயச் சகடமுதைத்ததூஉ மிம்மூன்றும், பூவைப்பூ வண்ணனடி" என்றும், பின்னவர் "மதிமன்னு மாயவன்வாண் முகமொக்குங், கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரமொக்கு, முதுநீர்ப்பழனத்துத் தாமரைத்தாளி, னெதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்புதுமலரொக்கு நிறம்" என்றும், "படியை மடியகத்திட்டானடியினன், முக்காற் கடந்தான் முழுநில-மக்காலத், தாப்பனித்தாங்கிய குன்றெடுத்தான் சோவி, னருமையழித்த மகன்" என்றும் பாடியிருத்தலான் இவர் மதம் வைணவம் என்பது நன்கு விளங்குகின்றது. -ப. ரா. தி.-

**திருமகள் சிறப்பு:** கல்வியிற் பெரிய கம்பர் பெரிய பிராட்டியைக் குறித்து "பூவிற்றிருவை யழகின் புனைகலத்தை, யாவர்க்குஞ் செல்வத்தை வீடென்னு மின்பத்தை, ஆவித்துணையை யமுதிற் பிறந்தாளைத் தேவர்க்குந் தம்மோயை" என்றும், "செந்தாமரைப் பொகுட்டிற் செம்மாந்து வீற்றிருக்கும், நந்தாவிளக்கை நறுந்தாழிளங்கொழுந்தை, முந்தாவுலகுமுயிரு முறைமுறையே தந்தாளை" என்றும் பாராட்டுகிறார். - ப. ரா. தி.


இந்து நேசன்.
(வாரப் பதிப்பு.)
உயர்ந்த தமிழ்ப் பத்திரிகை
65, அரமனைக்கார வீதி,
மதராஸ்.
36வது ஆண்டு நடக்கிறது.

ஆர்ய தர்மம்.
ஸநாதன தர்ம வாரப் பத்திரிகை.
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.
22வது ஆண்டு நடக்கிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வகுளமாலை.

தொகுதி I
Vol I

தாது வருஷம் தை மாதம்
JANUARY 1937.

பகுதி 1
No 1

## வகுளமாலை.

துறவிகட்கிறைவன் செங்கோல் நெறியென மறையேபூக்கும்
அறமுறுவகுளமாலை யணிகலமிலகுமார்வன்
திறலடி முழங்கு நாவர்திகழ் திருவல்லிக்கேணி
அறவரும் பயனும் செய்யாளகமரு அரியே காண்மின். (1)

அலகிலா மறைகளுக்கோர் தலையலங்காரமாகும்
கலைகளாயிரமொருங்கீர்கலை முதலெழுத்திலங்க
வலமுறு சங்குமுத்தம் மலிதருபொருநற் செல்வக்
குலபதி வள்ளல்தந்த செந்தமிழ் மொழியே கேண்மின். (2)

தொன்மறை நான்குமானேன் தோன்று நீர்மலை குலாவி
மின்னுருவந்தரங்கன் மிக்க புல்லாணி மேவித்
தன்னுருவென்னத்தானே தமிழெனத்திகழ்ந்த சீர்த்தி
பொன்னுலகுன்னியோர்க்கும் புலவர்க்கும் பன்னவற்றே. (3)

திருமணியிதய நன்மைத் திரளணி யரங்கச்சிங்கன்
பருமறைமரபரோது பாதுகம்பூத்த சென்னிக்
குருமணிகனிக்தொலித்த ஓசைபாலாசை யெம்மைக்
குருகையர் பதமலர்க்கே குணமுறப் பணித்ததம்மா. (4)

அங்கமுடன் மறை நன்குவிளங்கத்
தங்குரு கூரிறை தம்மறை ஓங்க
நங்கவிதார்க்கிக சிங்கமுழங்கும்
சங்கமறைத்தமிழெங்கு முயர்க. (5)

மாறுபடாதெதிராசர் முகத்தே
நாறுமறைத்திரு வாயிரமாறே
டாறு பெருக்கிய வீறுபெருந்தோ
ரேறு புகழ் முனியேரடிபோற்றி. (6)

பாரியற்கதிகனென்கோ பரிதியர்க்கொருவனென்கோ
சீரியர்க்கமுதமென்கோ செந்தமிழ்க்கந்தமென்கோ
சூரியர்க்காதியென்கோ தூயவர்க்காவியென்கோ
ஆரியர்க்கனைத்துமென்கோ ஆரணம் தமிழ் செய்தானை. (7)

அமிழ்தென மறையுட்கொண்ட அண்ணலே யருளினல் நன்
குமிழ்தருமெச்சிலாகி யொப்பரு புனிதமான
தமிழ் மறை தானே பாடித்தன் சடகோபன் வாயால்
உமிழ்திரு மொழியினட்சி உலகுக்கோர் வாழ்ச்சியாமே. (8)

நாதனிணை பூணுமறை நாவர்முடிபேண
வேதமமிழ் தாயதமிழ்மேய மகிழ் மாறன்
போதநிதியோதுகதி போகமதியெங்கட்
கேதமிலையாதுமென ஈதறைகுவாமே. (9)

மாசறுகுலேசன் பொன்னார் மலரடி நிலை யென்றோதும்
தேசெதிராசர் செந்நாத்தேங்கிய விருக்கினுச்சித்
தேசிகரருள் புனைந்த சுந்தரராசர் சேயாம்
கேசவனூது மீதோர் செந்தமிழ்ச் சங்கநாதம். (10)

தோற்றிய நற்றமிழ்ச் சொற்றிருவுற்றோர்
நோற்றெழு நாத்திரு வீற்றுயர் செல்வர்
போற்றிய மாறன பொன்னடிகட்கே
சாற்றிய வீதொரு தாழ்விலபத்தே. (11)

"வகுளமாலை" எனத்திருநாமம் சாற்றிய இப்பத்திரிகையை மாத மொருமுறை நம் சங்கவெளியீடாக விரித்து வளர்க்கக் கருதியுள்ளோம். ஒலிக்காத சங்கம் பயன் பயக்காது. செந்தமிழ் ஒலித்தலே சங்கத்தின்வன்மை. செந்தமிழ்முழங்குவதே சங்கமுள தென்பதற்கு அடையாளம். செந்தமிழ் முழங்காச் சங்கம் பால் சுரவாக் கறவையேஆம். சங்க மொலிப்பது செந்தமிழ்மாலை, மாறனில்மிக்கு மோர்தேவுமுளதே என்னுமதே மங்கல மோங்கிய சங்கத்தமிழ் ஒலி. மால்தனில் என்றது மாறன் கருத்தால். மாறனில் என்றே எம் சங்கம் கருதும். இக்கருத்தைத்தான் இச்சங்கம் முழங்கப்புகுந்தது. மாறன் முதற்றே சான்றோர் உலகு என்றே எம்சங்கம் முழங்காநின்றது.

மாறனும் சந்தமிகுதமிழ்மறைக்கடவுள் ணிந்தது வகுளமாலை. தொல் மறைகமழும் வகுளமே பூண்டு சொல் மணமிகு தமிழ்க்

கடவுளாயினர். வகுளம் காத்ததே துளவம். மாறன் காத்ததே திருமால். மாறன் காத்த திருமாலே உலகுகாக்கும். முதுமறை முதல்வன். பெற்ற தாயினுமாயின செய்யும் சடகோபன் செய்ய மொழியாயிரம்தானே எம்பெருமானார் தரிசனமா போங்கியது. தென்குருகூர்ப்புனிதர் தந்த திருவாயிரம் கொண்டே எம்பெருமானார் மறைப் பொருள் விளக்கியது ஆங்காங்கு வேண்டுழிச்செப்புவல். வடகலை காக்கும் தென்மொழியாண்டவர் குமரித்தலைவர். தென்மொழி காக்கும் வடகலையாண்டவர் எதிகட்கிறைவர். தென் சொற் கடந்து வடசொற்கலைக் கெல்லை, காண்டலே உபநிடதப் பரம் பொருளின் பொன்னடி மெய்ம்மை காண்டலாகும். தென்சொற் கடத்தலாவது தென்சொல் தேர்தலே. தாவப்படாததுகாண் தமிழெனும் அளப்பரும்சலதி. கடத்தல் என்றதற்கு அடைதல் எனப்பொருள் தெளிக. இது வடகலை வழக்கு. இவ்வழக்கினர் நங்கவிச் சக்ரவர்த்தி என்றதை இவண் காண்க. வகுளாபரணப்பெருமாள் அருளிய தமிழ்மாலை தெளியவோதியோர்கட் கல்லாது ஏனையர்கட்கு எஞ்ஞான்றும் வடசொற்கலைக்கு எல்லை காணலரிது என்றே இருகலைக்கும் ஒருங்கே எல்லை தேர்ந்த ஒரொருவரான நம்மறைமுடித்தேசிகனார் பறைசாற்றியருளினார்: தோன்று உபநிடதப்பொருள் தோன்றல் உற்றார் தமக்கும் சான்றாம் நங்காரி மாறப்பிரான்செந்தமிழ்மாலை என்றபோது மற்றென்? திருவாய்மொழியமிழ்தத்தைத் தாமும் உண்டு உலகுக்கும் ஊட்டுதலே மாறப்பிரான் திருமரபினில் பிறந்த பெருந்தகையோரனைவர்க்கும் வகுத்த கடன். அடியார்க்கு இன்பமாரியேயாம் வண்தமிழ் நூற்கவே நோற்ற மாறனில்மிக்குமோர் வள்ளல் உளதே? இவ்வள்ளலாருள்ளம் புகுந்தவாறே அண்ணலும் மிக்க ஞானவெள்ளச்சுடர் விளக்காய்த் துளக்கற்றமுதமாய்த் தெள்ளியது. எங்கும் பக்கநோக்கறியாது இவரை நோக்கியவாறே அப்பன் திருக்கண்தானே பைந்தாமரைக்காடெனப் பூத்தது. பொய்யறுபாவாயிரம் வழங்கிய நஞ்சடகோபச் செல்வரைக்கண்டே பரஞ்சுடரும் கண்ணுயிர முகில்வண்ண அழகனாய்த் திகழா நின்றது.

பொருளும் அருளும் ஒருங்கேசுரக்கும் இத்தகையகுணங்கடந்தபோதக்கடற் பெருமான் செந்நாநழுவிய தமிழ் மொழியாயிரவக்காரக்கனி வாரிவிழுங்கப்பிறந்தும் அக்கனி கடிந்து புறமே சென்று பற்றேயப்பிச்சைபுக்கு கருக்காய் கடிக்கும் நங்கடுவினை எத்திறம்

அந்தோ! தென்குருகூர் மணாளர்க்கே மாலையிட்டுவாழப்பிறந்தும் நாம் அன்னாரை மறந்து புறந்தொழுது பாத்தைபோல் கூழுக்கே மெய்வருத்திக் குப்பைதொகுத்து அஃதே செல்வமெனமயங்கி இன்பமிழந்து அவத்தே ஆழ்ந்து நல்லாரையும் நம்போல்வராக்கத் துணிந்து போந்தமையுணராமையினும் பேதைமையுளதே. என்கொலோ இம்மாபாவம்! சூதேகற்றோம். களவேபயின்றோம். அந்தோ இவ்வனைத்தும் செருப்புக்குத்தவன்றோ? ஆயுழி நம் நெஞ்சே நம்மைச்சுடும். துறந்தது அறம். பூண்டது வேடம். பயின்றதுகுத்து. பெற்றது செருப்பு. அதுவும் காலிட்டவாறே குத்துவாராறுந்து, கையே பாய்ந்துதலைமிசையேதாவித் தங்கியது. சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் என்றன்றோ ஆர்வத்தால் மன்னிய தென் அருள்மாரி உண்மை உணர்த்தியபடி. நம்நிலை நன்கேஉணர்ந்து மனம்கரைந்து இனியும் தேனநெறிஏகாது இயன்றவரை சான்றோரினத்திருந்து மாறன் தமிழ் மாலை ஓதித் தெளிந்து அவர்பொற்கழலைபரவிக் கரைஏறும்கதி சேர்வோமாக. இவ்வுணர்ச்சிஎழுந்தவாறே எமக்குஉய்வண்ணம் திண்ணம் என்றே துள்ளித்துணிந்து தெள்ளியநங் குலபதிக்கே இம்மாலையிட்டோம். ஈதே எம்வகுளமாலை. இந்நாளே நந்நாள். இத்தையோர் திங்கள் விடிந்தவாறே யாம் நல்விடிவுகண்டோம். மகிழ்மாறர்க்கு மாலையிட்டு மகிழ்ந்தோம். இம்மாலையே எம் வகுளமாலை.

மாறமணாளர் பெருமையும் அன்னார்விரித்த உண்மையின் தன்மையும் வகுத்த நெறியின் நீர்மையும், இழைத்த மொழியின் சுவையும் இனித்தொடர்ந்து தெரிக்கப்படும். கங்கையும், யமுனையும் கலந்தாற்போல் தென்மொழியும், வடகலையும் கலந்த சீர்மையும் கலந்தே நீர்மையுற்றமையும், உண்மையும் அறமும் ஒருங்கிய பான்மையும் ஆங்காங்கு விளக்கப்படும். சிறுகக்கட்டிப்பெருக வாழக்கருதிப் பத்திரிகையைத் தற்போது இரண்டு பாரங்கள் உள்ளதாய் அமைத்துள்ளோம். பக்கம் விரிந்தால் படிப்புச்சுருங்கும். ஓசை வளர்ந்தால் ஆசை தேயும். நாளடைவில் உருசிபெருத்தவாறே பக்கம் மிகைக்கவும் ஆங்கிலத்தில் ஓர்பகுதி விடுக்கவும் கருதியுள்ளோம். பராங்குசபிரான்தாமே நங்கருத்தைத்தலைக்கட்டியருள்புரிந்து எம்மை ஆட்கொள்வாராக. ஈதே அடியோங்கள் மெய்ந்நின்ற மாறப்பிரான் கேட்டருளுமாறு கரங்குவித்துச்செய்யும் விண்ணப்பம்.

மடலூரு மாதரெழுக்காதலென்ன உல்கேழுமிழ்த்தி மிகுமோர்
அடலாழியோத மடியாற நின்று குடலார்வ மல்கியநாளால்
விடலேதுமில்ல துடலென்னவோது முலகாக உந்தியலர்சேர்
அடலோத வண்ணரடி சூடியாங்கள் முடிமன்னரென்ன வமைவாம்.

கேசவய்யங்கார்,
பத்திராசிரியர்.

---

வகுஊஉராமூா விததஜொஷா வாராஉஹூயஷ்யா ஸுஹசதீநாழ ।
வஹதா ·நிதயும் விஷியவரூஷிம் நரஹரிவீக்ஷாவிகஷிதாதூா ॥

# நம்மாழ்வார் வைபவம்.

———:(o):———

இவ்வாழ்வாராகிறார் ஸ்ரீய: பதியால் மயர்வறமதி நலம் அருளப் பெற்றவர்களாகிய ஆழ்வார்கள் பதின்மரில் ஒருவர். இவர் ஸ்ரீமந் நாராயணனுடைய அம்சமும் விஷ்வக்ஸேனருடைய அம்சமும் பொருந்திய ஒரு ஸம்ஸாரி சேதனர். இவ்வர்த்தம் த்ருதீய ப்ரம்ம தந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி அருளிச்செய்த குருபரம் பராப்ரபாவம் மூவாயிரப் படியில் விளங்கும். இவர் ஸ்ரீ வைஷ்ணவர்கள் இருகலையார்களாலும் ப்ரபன்ன ஸந்தான கூடஸ்தரென்று புகழப்படுவர். இப்படி இவரைப் புகழ்வதே பின்னோர்களாகிய ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லோரும் மோக்ஷத்திற்காக ப்ரபத்தியை அனுஷ்டிக்க வேண்டும், அனுஷ்டித்தும் வருகிறார்கள், என்பதற்கு ப்ரதான காரணமாகும். இவர், ப்ரபன்னர்களுக்கு ப்ராக்ருத தேகத்தைவிட்ட பிறகு தேச விசேஷத்தில் வரக்கூடிய பரபக்தி ,பரஞான பரம் பக்திகளை பகவதனுக்ரக விசேஷத்தினால் ப்ரபத்தியின் பலமாக இச்சரீரத்தோடிருக்கும் பொழுதே பெற்றவர்களான மகான்களில் சிறந்தவராயுள்ள ஒருவர். இவர் கர்ம ஞான பக்திகளுக்கு அடைவில்லாத நான்காவது வர்ணத்தில் அவதரித்த மாத்திரத்தைக்கொண்டு, கர்மயோக ஞானயோக பக்தியோகங்களில் தமக்கு அதிகாரமில்லாமையை "நோற்ற நோன்பிலேன்" இது முதலானவிடங்களில் பேசி "கழல் களவையே சரணாகக்கொண்ட" இத்யாதிகளில் ஸித்தோபாய ஸ்வீகாரம்பண்ணி இதை ஸாங்கமாக அனுஷ்டிக்கும் தசையில் "அகலகில்லேன் இறையு

மென்று", "உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்று தாம் செய்யும் ஆத்மஹவிஸ்ஸமர்ப்பணத்திற்கு ஸ்ரீய: பதியாகியவனே உத்தேசியமென்று அறுதியிட்டார். இச்சரணாகதிக்கு அதிகாரம் உபாயாந்தர சூன்யத்வம் ப்ரயோஜனாந்தரவைமுக்யம் என்னும் விஷயத்தை "மயர்வறமதி நலமருளினன்" என்னுமிடத்தில் எனக்கென்று சொல்லாமல் தம்முடைய கருந்தரையான நிலைமையைக் காட்டி வெளியிட்டார். இவர் ஏற்கனவே தாம் பிரபந்தங்களை அருளிச்செய்வதற்குமுன் இச்சரீராவஸானத்தில் மோக்ஷத்தைக்கருதி ப்ரபத்தியைச் செய்திருந்தும் திருவாய்மொழிப் பிரபந்தத்தில் ஐந்து தடவை சரணாகதியை இந்த இருள்தருமா ஞாலத்தில் இருப்பை வெறுத்து இப்பொழுதே மோக்ஷத்தைப் பெறவேணுமென்று அனுஷ்டித்திருந்தும், ஸ்ரீய: பதியான சரண்யன் இவர் முகமாகவே இத்திருவாய் மொழி ப்ரபந்தத்தை தலைக்கட்டிக் கொள்ளவேணுமென்று திருவுள்ளம்பற்றி இவர் பிரார்த்தித்தபடி மோக்ஷம் கொடுப்பதற்கு விளம்பித்தான். இவர் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆக நான்கு. இவைமுறையே ரிக்வேத ஸாரமென்றும், யஜுர்வேத ஸாரமென்றும், அதர்வண வேதஸாரமென்றும், ஸாமவேத ஸாரமென்றும், ஸம்ப்ரதாயஸ்தர்களால் வ்யவஹரிக்கப்படும். இவைகளில் சரமப்ரபந்தமான திருவாய்மொழி ஆயிரம் பாசுரமாயிருப்பதுபற்றி ஆயிரம் சாகையான ஸாமவேதத்தின் ஸாரமென்று சொல்லுவதற்கு ஔசித்யமுமுண்டு. ஆனால் ஸ்ரீமந் நிகமாந்த மகா தேசிகன் இத்திருவாய் மொழியில் ஆதியில் இருபத்தொன்று பாசுரங்கள் நான்கு அத்யாயங்கள் கொண்ட ப்ரஹ்ம ஸூத்ரத்தின் அர்த்தத்தைத் தெளிவாக விவரிப்பதைக்கொண்டு ரிக்வேதஸாரமென்றும், கானத்தோடு சேர்ந்த ஆயிரம் பாசுரமாயிருப்பதைக்கொண்டு கானப்ரதானமாயும் ஆயிரம் சாகையாயும் இருக்கும் ஸாமவேத ஸாரமென்றும், ஸ்ரீய: பதியே உபாயமும், ப்ராப்யமும் என்று ப்ரதான ப்ரதிபாத்யமான அர்த்தத்தோடு சேர்ந்த நூறு திருவாய்மொழிகளைக்கொண்டு நூறு சாகையான யஜுர்வேத ஸாரமென்றும், ச்ருங்காரம் முதலிய ஒன்பது ரஸங்களை ப்ரதிபாதனம் பண்ணும் க்ரமத்தை அனுஸரித்து ஒன்பது சாகையான அதர்வண வேதஸாரமென்றும், இத்திருவாய் மொழி தன்னையே நான்குவேத ஸாரமாக நிர்வகித்தார். இப்படி இவ்வாழ்வாரருளிச்செய்த நான்கு ப்ரபந்தங்கள் நான்கு வேதஸாரமா

யிருப்பதைக்கொண்டு இவைகளுக்கு திருமங்கை மன்னனருளிச்செய்த ஆறு பிரபந்தங்களை சீக்ஷை முதலான ஆறு அங்கங்களாயும், மற்ற ஆழ்வார்களருளிச்செய்த ப்ரபந்தங்களை உபாங்கங்களாகவும் ஸம்ப்ரதாயஸ்தர்கள் நிர்வகிப்பார்கள். ஆனது பற்றியே இவ்வாழ்வாருக்கு மற்றை ஆழ்வார்களை அங்கமாக ஸம்பிரதாயத்தில் சொல்வது வழக்கம்.

இவ்வாழ்வார் அவதரிக்கும் காலத்தில் சடமென்கிற ப்ரஸூதி வாயுவ்வென்று பகவத் ஞானத்திசளிற் குறைவற அவதரித்தவராகையால் "சடகோப"ரென்னும் திருநாமம் பெற்றார். இவருக்கு மாறன் முதலிய அனேக தமிழ்த்திரு நாமங்களுமுண்டு. நான்காவது வர்ணத்தில் அவதரித்தது மாத்திரமேயன்றி அவ்வர்ணத்திற்குரிய ஆஹார்ஸதவாஸாதிகளான எல்லாவற்றையும்விட்டு திருக்குருகைப்பிரான் ஸன்னிதியிலிருக்கும் திருப்புளியாழ்வாரடியில், திருக்கண் விழியாமல் பத்மாஸனத்துடன் பதினாறு திருநக்ஷத்திரம் வரையில் திவ்ய தம்பதிகளின் த்யானத்தில் ஏகாக்ரசித்தராய் எழுந்தருளியிருந்தார். பிறகு மதுரகவிகளுக்குத் தாமருளிச்செய்த பிரபந்தங்களை உபதேசித்தும் மற்றும் ஆச்ரிதவர்க்கங்களுக்கு தத்வஹித புருஷார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்சங்களை உபதேசித்துக்கொண்டும், இந்த லீலாவிபூதியில் முப்பத்தைந்து திருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்தார். இவர் இங்கு எழுந்தருளியிருக்கும் பொழுதே தமக்கு வரப்போகிற இச்சரீர வியோக காலத்தில் நடக்கக்கூடிய மேக ஸமுத்திராதிகளுடைய ஆனந்த ஸம்ப்ரமம் தொடங்கி, அர்ச்சிராதிகளான ஆதிவாஹிகர்கள் மார்க்கத்தில் தமக்குச்செய்யும் ஸத்காரங்களை முன்னிட்டு ஸ்ரீவைகுண்டமென்னும் தேசவிசேஷத்தில் திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் தமக்குச்செய்யும் உபசாரங்களை வர்ணித்து பர்யங்காதிரோகண பூர்வகமாய் தாம்பெற்ற உபய விபூதி விசிஷ்ட ப்ரஹ்மாநந்தானுபவ ஸம்பத்தை வர்ணித்து தாம் மனோரதித்தபடியே தம்முடைய விடாயும் ஒருபடி முடிந்தபடியை இப்ரபந்தத்தில் சொல்லி முடித்தார். இந்த விஷயம் ஸ்ரீமத் ராமாயணத்தில் பெருமாள் முடிசூடி ராஜ்ய நிர்வாகம்பண்ணி வருங்காலத்திலேயே "கற்பாலயோத்தியில் வாழும் சராசரமுற்றவும்" தர்முடனழைத்துக்கொண்டு தன்னுடைச் சோதிக்கெழுந்தருளின விருத்தாந்தத்தை வர்ணித்து ஸ்ரீ வால்மீகி பகவான் ப்ரபந்தத்தை தலைக்கட்டின ப்ரகாரத்தோடு ஒக்கும். இவ்வாழ்வார் இத்திருவாய்மொழியில் தத்வத்ரய நிரூபணத்தையும்

நம் ஸித்தாந்தத்துக்கு ப்ரதான ப்ரதிதந்த்ரமான சரீராத்ம பாவரூப ஸம்பந்த நிரூபணத்தையும், அர்த்த பஞ்சக நிரூபணத்தையும், ஸ்ரீய: பதியே பரதேவதையென்னும் பரதேவதா பாரமார்த்ய நிரூபணத்தையும் நன்றாக விளக்கியுள்ளார்.

ஸ்ரீமந் நிகமாந்த மகா தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் உபபாதனம் பண்ணின அர்த்த விசேஷங்களுடைய க்ரமத்திற்கு இத்திருவாய்மொழியே மூலமென்னும் விஷயம் ஈடுகாலக்ஷேபம் பண்ணினவர்களுக்கு நன்றாய் விளங்கும். இத்திருவாய்மொழி மூலமாயும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் இதின் ஸார ஸங்க்ரஹமாயும் ஈடு முப்பத்தாறாயிரப்படி இதன் நிரூபண பரமாயிருக்கும் விஷயம் அடுத்த ஸஞ்சிகையில் விசதமாய் வெளியாகும்.

அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் பண்டிதபூஷணம் தில்லையம்பூர்
**தி. வி. கோ. சக்ரவர்த்யாசார்ய:**

# "நெடியோன் குன்றம்"

தமிழ்நாட்டின் எல்லையாக வடவேங்கடம் தென்குமரிகளைக் குறிக்குமிடத்தில், இளங்கோவடிகள் தாம் சிலப்பதிகாரத்திலே

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு"

என்று கூறுவர். நெடியோன் என்பதற்கு நிலங்கடத்தற்கு நீண்ட திரிவிக்கிரமன் என்பது பொருளாய், அவ்வவதாரமெடுத்த திருமாலைக் குறிப்பதாகும். இச் சொல், பெரியோன் என்ற பொருளிலும்,

"முந்நீர் விழவி னெடியோன்" (புறம். 9)
"விலைந்தரு திருவி னெடியோன்" (மதுரைக் காஞ்சி.)

என்பன முதலாகத் தமிழ் மொழியில் வழங்குவதுண்டு. ஆனால், தெய்வங்களைக் குறிக்குமிடத்தில், விசேஷணங்களும் முன் தொடர்ச்சிகளும் இல்லாமல் தனித்துநின்றே திரிவிக்கிரமனான திருமாலைக் குறிக்கும் சக்தியுடையது, இப்பதம்.

"நெடியோன் குறளுருவாகி"
"நெடியோர் மார்பி லாரம் போல"

எனக்காண்க. இனி, நெடியோன் குன்றம் என்பது, தமிழகத்

தின் வடவெல்லையாய் உள்ள திருவேங்கடத்தைக் குறிப்பதாம். ஆகவே, திருவேங்கடமுடையானை 'நெடியோன்' என்பதனை இளங்கோவடிகள் கூறினரென்பது தெரியலாம். இவ்வாறே 'செங்கணெடியோன்' என்று வேறிடத்தும் அவர் கூறுவர். இது, அத்திருமலையெம்பெருமானைத் திரிவிக்கிரமனைக் குறிக்கும் முன்னோர் வழக்கிற்குப் பெரிதும் ஒத்ததாகும். "நெடியோனே வேங்கடவா" என்றார் குலசேகரப்பெருமாளும். திருமலையைப் பற்றிய 'ஒழிவில்காலமெல்லாம்' என்ற திருவாய்மொழியின் இறுதிப் பாசுரத்தில் "தாள் பரப்பிமண் தாவிய ஈசனை" என்று நம்மாழ்வாரும் பணித்தருளுவர். இவ்வாறு திரிவிக்கிரமனைத் திருவேங்கடமுடையானைப் பெரியோர் கூறி வருவதுபற்றித் திருவாய்மொழியீட்டில் பூர்வாசாரியர்கள் எழுதியவை வருமாறு:—"திருவேங்கடமுடையானையன்றோ கவி பாடிற்று என்னில்,

"கொண்டாய் குறளாய் நிலமீரடியாலே
விண்டோய் சிகரத் திருவேங்கடமேய, அண்டா"
"மண்ணளந்த இணைத்தாமரையடிகள்"
"உலகமளந்த பொன்னடியே யடைந்துய்ந்து"

என்று ஆழ்வார்கள் அருளிச்செய்யா நிற்பர்கள்; எல்லாரையுந் திருவடிகளின் கீழே இட்டுக் கொள்ளுகைக்காக நிற்கிற நிலையாலும் வரையாதே கானமும் வானரமுமான இவற்றுக்கு முகங்கொடுத்துக் கொண்டு நிற்கிற நிலையாலும் திருவேங்கட முடையானை ஸ்ரீவாமனனாகச் சொல்லக்கடவதிறே" என்பது. இவ்வாறு, திரிவிக்கிரமனைத் திருவேங்கட முடையானைச் சங்ககாலமுதலாக ஆன்றோரெல்லாம் ஒப்பக்கூறிவருவது, வேதவழக்கை அடியொற்றிக் கொண்ட தொன்றாகும். "அகிலபுவனங்களையும் தன் மூவடிகளின் கீழ் ஒடுக்கியவன் எவனோ அப்பெருமான் கிரியில் நிலை பெற்றருளுகிறான்" என்றகருத்தில்—

"ம்ருகோநபீம: குசரோகிரிஷ்டா: யஸ்யோருஷு த்ரிஷு
விக்ரமணேஷு அதிக்ஷியந்தி புவநாநி விச்வா"

எனவரும் வேதவசனம் இங்கு அறியத்தக்கது.

திரிவிக்கிரமன் திருமலையில் நித்யவாஸஞ் செய்வதைக்கூறும் இவ்வேதப் பொருளையே—

"குன்றமேந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞால மளந்தபிரான் பரன்
சென்றுசேர் திருவேங்கட மாமலை"

என்று வேதந்தமிழ் செய்த குருகைப் பிரானும் அருளிச்செய்வாராயினர். அன்று ஞால மளந்த பிரான் சென்று சேர்ந்த திருமலை என்று ஆழ்வார் அருளியது, இவ்வேதவாக்யங் கூறும் ஐதிகத்தையே குறிக்கொண்டதென்பது உய்த்தறியத்தக்கது. இவ்

வரியசெய்தியை உட்கொண்டே ஸ்ரீமத். வேதாந்த தேசிகனும் "வேதவெற்பு" என்று திருமலையைக் குறியிட்டருளியது மெனக.

இனி, தமிழ் வழக்கெல்லாம் நன்கறிந்த உரையாளரான நச்சினார்க்கினியர் 'வடவேங்கடந் தென்குமரி' என்ற தொல்காப்பியப் பாயிரவுரையில்—"நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி உலகந்தவஞ் செய்து வீடு பெற்றமலை" என்ற தொடரால், திரிவிக்கிரமனையே திருவேங்கட முடையானைக் கூறியதோடு, 'உலகந்தவஞ்செய்து வீடு பெற்றமலை' அவ்வெற்பு என்ற செய்தியொன்றையுங் குறிப்பிட்டனர். இதனையே—"திருவேங்கடம் நங்கட்குச் சமன்கொள் வீடுதருந்தடங்குன்றமே" என்று நம்மாழ்வார் பணித்தருளுதல் அறிந்து ஒப்பிடத்தக்கது. இதனால், ஒருகாலத்து உலகத்தார்க்கு இம்மலை வீடு அளித்த புராணவரலாறு பிரசித்தமாயிருந்ததென்பது வெளியாம். பிராட்டியைத் தேடிவரும்படி சுக்கிரீவ மகாராஜன் வானரவீரர்களை ஏவுமிடத்து —

"கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரே லுங்கொடிய
கொடுமை நீங்கி வீடுறுதிர்" என்றும்,

"வலங்கொள் நேமி மழைநிற வானவன்
அலங்கு தாளிணை தாங்கிய அம்மலை
விலங்கும் வீடுறுகின்றன மெய்ந்நெறிப்
புலங்கொள் வார்கட் களையது பொய்க்குமோ"

என்றும் கூறியதாகக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடரும் பாடுதல் மேற்கூறிய கருத்துக்குப் பெரிதும் இயைந்திருத்தல் காணலாம். இத்திருமலை உயிர்களின் வினைத்தொடரை வேரறுப்பதென்பதை "திருவேங்கட மாமலையொன்றுமே தொழ நம்வினை யோயுமே" என்று ஆழ்வார் பணித்தவாறே,

"அரவணைச் செல்வன் வாழு மந்தமிழ் நிலத்தி னெல்லைத்
திருமலைகண்டுணர்ந்தோர் செறிவினைத் தொடரறுக்கும்."

என வீரசைவரான துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவரும் கூறுவர். இனி அருணகிரிநாதர் தம் திருப்புகழொன்றில்—

"உபசாந்த சித்த குருகுல பவ பாண்டவர்க்கு வரதன்மை
யுருவோன் ப்ரவித்த நெடியவன் ருஷிகேசன்
உலகீன்ற பச்சை யுமையண்ணன் வடவேங் கடத்தி லுறைபவன்
உயர்சார்ங்க சக்ர கரதலன் மருகோனே"

என்று இந்நெடியோன் குன்றத்தைப் புகழ்ந்திருத்தல் அறியத்தக்கது. இப்பாடல், திருமலைவிஷயமாக ஒருசாரார் கூறிவரும் போலியுரைகளை மறுத்துப் பெரியோரும் முன்னோருமான சுப்பிரமணியபக்தர் கருத்து இன்னதென்பதைத் தெளிவாக்க வல்லதாம். நெடியோன் எனபது திரிவிக்கிரமனான திருமாலுக்குப் பிரபலமான திருநாமம் என்பதை 'ப்ரவித்த நெடியவன்' என்பதும், தமிழ்க்கெல்லையான வேங்கடமே தாம் பாடுவதென்பதை 'வடவேங்

கடக்கில்' என்பதும்; அவ்வேங்கடேசன் திருக்கரங்களில் திருவாழி திருச்சங்குகள் என்றுமிருந்தவை என்பதை "உயர்சார்ங்க சக்ரகரதலன்" என்பதும் அழகாக விளக்குதல் காண்க. இவற்றால், நெடியோன் என்பது திருவேங்கடமுடையானுக்குத் திரிவிக்கிரம நிலை பற்றி முன்னோர் வழங்கிய திருநாமம் என்பதும், அவன் சென்று சேர் குன்றத்தின் சிறப்பும் மிகத்தெளிவாகின்றன.

மு. இராகவையங்கார்.

———:O:———

ஸ்ரீ சடகோபமுனயேநம:

# மாரனை வென்ற மாறன்.

"பாடுவதெல்லாம் பராங்குசனை நெஞ்சத்தால்
தேடுவதெல்லாம் புளிக்கீழ்த் தேசிகனை — ஓடிப்போய்க்
காண்பதெல்லாம் நங்கை யிருகண்மணியை யான்விரும்பிப்
பூண்பதெல்லாம் மாறனடிப் போது."

'எய்தற்கரிய மறைகளை ஆயிரம் இன்தமிழால் செய்தற்கு உலகில் வரும் சடகோபனு'க்கு வழங்கும் பல்வகைத் திருநாமங்களுள்ளும் மாறன் என்னும் பெயர் சிறந்து விளங்குவதொன்றாகும். பொலிந்து நின்ற பிரானருளால் உடைய நங்கையார் திருவயிற்றில் பிறந்து உலக இயற்கைக்கு மாறுபட்டவராக அழுதல், பால் குடித்தல் முதலிய செயல்களற்றிருந்தமையே இப்பெயர் படைத்ததற்குக் காரணமாகும். பராங்குசனை வாயிறைப்பாடி, புளிக்கீழ்த் தேசிகனை நெஞ்சத்தால் தேடி, கண்களால் நங்கை யிருகண்மணியை ஓடிப்போய்க்கண்டு, மாறனடிப்போதினைச் சென்னிக்கு விரும்பிப் பூண்டு விளங்கும் செய்தியைத் தெரிவிப்பது இச்செய்யுள். இம்மன்னிய சீர்வெண்பா ஆழ்வார் திருநகரியில் பழைய ஏட்டில் கண்டதெனச் 'செந்தமிழில்' பலவருடங்கட்கு முன்னரே வெளிப்போந்தது. இதனுள் மாறனடியே தலைக்கணியாமென விளக்கியவாற்றால் மாறனடி பணிந்தே உய்வெய்த வேண்டுமென்பது போதரும். காமநாலுடையாரோ;

"கன்னலன்றி வேம்புநுகர் காமத் துரோகிகள்போல்,
பின்னையொரு தெய்வத்தைப் பேசாமே — எந்நாளும்
சாற்றுவதும் காமகலை சாதிப்பதும் காணம்
போற்றுவதும் காமனடிப் போது" என்று போற்றியழிவர் !

மாரன் என்பான் மன்மதன்; காதற்கடவுள்; காமத்தை விளைவிப்பவன். திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளது நுதல் விழிக்குத் தோற்றான் இவன் என்பது வெற்றுரையே. தோற்றோடியது நம்மாறனுக்கே. சடையோன் வென்றதிண்மையாயின் கந்தனும் கணபதியும் தோன்றப்பெறார். நம்மாறனே 'பாட்டாய பலபாடிப் பழவினைகள் பற்றறுத்து நாட்டாரோடியல்வொழித்து நாரணனை நண்ணியவர்.'

'கொண்ட பெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும் கண்டதொடு பட்டதல்லால் காதல் மற்று யாதுமில்லை' என்று பரோபதேசம் செய்து காமத்தின் வழியே நின்ற உலகினைத் திருத்திப்பணி கொண்டு கண்ணனுக்கே ஆமது காமம் என்று ஆக்கியவர். மதுரகவிகளும் நாதயாமுனயதிவராதிகளும் அங்ஙனம் திரிந்து வழிவழியாக வந்த உலகினையும் திருத்த ஒருப்பட்டவராவர். 'நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும் நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்' என்று தாம் ஆழ்வார் திருவருளுக்கு ஆளாகாத காலத்தே அர்த்த காமபரவசராய்ப் போந்தமைக்கு அநுதபித்தார் மதுரகவிகள். 'செம்பொன்மாடத்திருக்குருகூர் நம்பிக்கன்பனாய் அடியேன் சதிர்த்தேன் இன்றே' என்று மாறன் அன்புக்கிலக்கான பின்னர் மாரன் அம்புக்கு இலக்காகாது தான் பெற்ற பரிசினைப் பெருமிதத்துடன் சதிர்த்தேன் என்றனர். கல்வியிற் பெரிய கம்பனும் தாம் மனமுருகிப் பாடிய சடகோபரந்தாதியில் 'முளரிக்கைவாள் நகைமொய் குழலார் அத்திக்கு மூலம் குருகைப்பிரான் சொன்ன ஆயிரமே' என்று நம்மாழ்வார் பாசுரங்கள் மாதர் பால் நேயத்தை ஹதம் செய்யவல்லது என்றதும் உய்த்துணரவல்லது. ஆழ்வாரே தம்மை 'மதன செங்கோல் நடாயின கூற்றங்கண்டீர் உயிர்காமின்கள் ஞாலத்துளே' என்று பாகவதர்கள் வாய்மொழியாய் வெளியிட்டனர். மெல்லினத்தாரோடிணக்கும் இடையினம் இடையே யுடைய மாரனை வல்லினம் இடையேயுடைய மாறனே வென்றான் என்பதே நயமுடைத்து.

> "கண்டு கேட்டுண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள."

என்னும் மாரனது காம நூலுட்கூறிய சிற்றின்பப் பகுதியை நம்மாறன், "கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலுமைங்கருவி கண்ட அளவிலாப் பேரின்ப"மாக மாற்றித் தந்ததே மாரனை மாறன் வென்றமைக்குப் போதிய சான்றாகும்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாலி அ. இராமாநுசன்,
ஸ்ரீபெரும்பூதூர்.

:o:

# சிற்றின்பமும் பேரின்பமும்.

உலகிலுள்ளாரனைவரும் இன்பத்தைச் சிற்றின்பமென்றும் பேரின்பமென்றும் இரண்டுபடச் சொல்லுகின்றனர். எல்லாருடைய அபிப்பிராயமும் மண்விண்பாதாளங்களாகியவிம் மூன்றுலகிலும் ஆன்மாக்களனுபவிக்கு மின்பம் சிற்றின்பமென்பதும், இவைகளுக்கு மேலுள்ள கடவுளுலகில் அவ்வகளனுபவிக்கு

மின்பம் பேரின்பமென்பதுமேயாம். இனி "சிற்றின்பம்"; "பேரின்பம்" என்னு மிரண்டு சொற்களின் பொருள் களையும் சொல்லளவே நோக்குங்கால், முதலது "சிறிதாகிய - அழியும்படியான" இன்பமென்றும், மற்றையது "பெரிதான-அழிவில்லாத" இன்பமென்றும் விளங்கும். இப்பதங்களை மதக்கோட்பாடில்லாத ஔவையார் "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதேயின்பம்" என்று சிற்றின்பத்தையும், "பரனை நினைந்து இம்மூன்றும் விட்டதே பேரின்பவீடு" என்று பேரின்பத்தையும் விளக்கியுள்ளார். மூன்றென்றதில் சிற்றின்பமொன்று. மற்றிரண்டைப்பற்றிப் பின்னே விசாரிப்போம்.

முற்கூறியவையால் சிற்றின்பமென்பது ஓர் ஆண்மகனும் பெண்பாலும் ஒன்றுபட்டமனத்துடன் நுகரும் இன்பமென்றும், அதில் காதலனால் காதலிக்கும் காதலியால் காதலனுக்கும் இன்பம் ஏற்படுகிற தென்றும், பேரின்பமென்பது ஆன்மாக்களுக்குப் பரனுடைய நினைப்பினால் உண்டாகிறதென்றும் தெரிகிறது. இனிஇன்பமுண்டாவதற்கு இரண்டு பொருள்கள் முக்கியம். ஒன்று இன்பத்தைக்கொடுப்பது, மற்றொன்று இதனை நுகர்வது. இஃது பாமரரும் சொல்லக்கூடிய உண்மை. ஒரேபொருள் தன்னைத்தானே நுகர்ந்து கொள்ள முடியாது. சிற்றின்பத்தைக் காதலன் காதலிக்கும் காதலி காதலனுக்கும் கொடுப்பதால் இவர்கள் ஒருவருக்கொருவர் கொடுப்பவர்களும் நுகர்பவர்களுமாகின்றனர். ஒருவரின்றி மற்றொருவருக் கின்பமில்லை. ஆகையால் இவர்கள் சரீரவமைப்பு வேறுபட்டிருப்பினும் ஆன்மாக்களின் தன்மை ஒன்றே யென்பதற் கையமில்லை.

பேரின்பம் "பரனை நினைப்பதால் உண்டாகும் இன்பம்." பரன் என்னும் சொல்லில் அன் என்னும் ஆண்பால் விகுதி காதலன் ஸ்தானத்திலிருப்பவன் பரனென்றுணர்த்திற்று. ஆகையால் ஆன்மாக்கள் காதலியின் ஸ்தானத்திலுள்ளவை யென்பது தெற்றென விளங்குகிறது. ஆனால் இங்கு சிற்றின்பத்தைப் போல் காதலியால் காதலனுக்கு இன்பமென்பதில்லை. துன்பமுடையவனுக்குத்தான் இன்பம் வேண்டுமே யொழிய இன்பமே எப்பொழுது முடையவனுக்கு வேறென்ன வின்பமிருக்கிறது?. ஆகையால் ஆனந்த மயனை பரனுக்கு இன்பம் வேண்டியதில்லை. ஆன்மாக்களுக்கே இன்பம் வேண்டியது. அவைகளுக்கது பரனை நினைப்பதாலுண்டாகும்.

சரீரச் சேர்க்கையால் வரக்கூடிய இன்பம் ஒரு காலத்தில் ஒருவருக்குத்தான் கிடைக்கும். ஆனால் நினைப்பினால் வரக்கூடிய இன்பம் ஒரே காலத்தில் எண்ணரிய பலருக்குக் கிட்டக்கூடியது. ஆகையால் பேரின்பம் ஆன்மாக்கள் பலவற்றிற்கு ஒரே காலத்தில் கிடைக்கும். கொடுப்பவன் மேலானவன் கொள்பவன் தாழ்ந்தவன். இங்கே

யின்பத்தைக் கொடுக்கும் பரன் உயர்ந்தவன், அதனைக் கொள்ளும் ஆன்மாக்கள் அவனுக்குத் தாழ்ந்தவைகள்.

இது மட்டில் செய்த வாராய்ச்சியால் கடவுள் ஒருவரென்றும், ஆன்மாக்கள் பல வென்றும், அவர் இன்பத்தைக் கொடுப்பவ ரென்றும் ஆன்மாக்கள் அவ்வின்பத்தை நுகர்பவை யென்றும், அவன் மேலானவனென்றும், அவனுக்கு ஆன்மாக்கள் கீழ்ப்பட் டவை யென்றும், அவனாண் மகனென்றும், ஆன்மாக்கள் பெண் தன்மையன வென்றும், ஆன்மாக்களுக்கு அவை படைத்த சரீரத் தோற்றத்தால் வேறுபாடுகள் காணப்படினும் அவை உண்மையில் ஒரே தன்மையனவென்றும் விளங்கிற்று.

ஸ்ரீகாழிச்சீராம விண்ணகரம்,

ஆர். சந்தானகிருஷ்ணய்யங்கார்.

——:(o):——

## பன்மணித்திரள்.

### 1. தமிழ்த்தனிமாண்பு:—

"இனிமையும் நீர்மையுந்தமிழெனலாகும்"; "தமிழினுமினிய தீஞ்சொற்றையல்"; "தன்னேரிலாத தமிழ்"; "ஆயுந்தோறுமின் பந்தருந்தமிழ்"; "என்றுமுளதென்றமிழ்" என்று பண்டைத்தமி ழரும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்" என்று பிற்காலத்தவரும், "மனிதராற் பேசப் படுகின்ற மிகப்பொலிவுந்திருத்தமுஞ் சீருமுடைய பாஷைகளுள் தமிழுமொன்று" (கனம் டெயிலர்); "கிரேக்குப் பாஷையினும் நயமான செய்யுள் நடையுடையது; லத்தீன் பாஷையினும் பூரண மானது" (கனம் வின்ஸ்லோ) என்று பிறநாட்டு பண்டிதரும் போற்றும் சீர்மையுடையது செந்தமிழ்.

### 2. முப்புலவர்:—

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங் கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை, வெறும்புகழ்ச்சியில்லை". கம்பர் மதம் ஸ்ரீவைஷ்ணவம் என்ப தற்குப் பல சான்றுகள் உள்ளன. திருமாலின் திரு அவதாரங் களில் ஒன்றாகிய இராமாவதாரத்தைப் பாடியிருத்தலும், ஆழ்வார் களிற்றலைவராய வகுளாபரணருக்கு சடகோபர்அந்தாதியைச் சாற்றியிருத்தலும், ஆழ்வார் என்ற பெயர் அவருக்கிருத்தலும்,

திருவரங்கம், திருவழுந்தூர் தலங்களில் அமைந்த கோயில்களி லேயே அவர் சிலேயிருத்தலும், ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயப்படி அவரைச் சமாதி செய்திருத்தலும் இவைபோன்ற பிறவும் ஏதுக் களாக அமைந்துள்ளன. பொது மறையான திருக்குறளில் திரு மாலேயும், திருமகளேயும் நன்கு அமைத்துப்போற்றும் திருவள்ளு வரும் வைணவரே. இளங்கோவடிகள் கோவலன் சரிதையில் கோவலனை பரந்தாமனைக் குறித்துக் கூறுவதைக் கேண்மின். "மூவுலக மீரடியில் முறை நிரம்பா வகை முடியத்தாவிய சேவடி செப்பத் தம்பியொடும் கான்போந்து சேர்வரணும் போர்மடிய தொல்லிலங்கை கட்டழித்த சேவகன் சீர்கேளாத செவியென்ன செவியே. திருமால் சீர்கேளாத செவியென்ன செவியே. பெரிய வனை மாயவனைப் பேருலகமெல்லாம், விரிகமல வுந்தியுடை விண்ணு வனைக் கண்ணும் திருவடியும் கையும் கனிவாயும் செய்ய, கரியவனைக் காணுத கண்ணென்ன கண்ணே. கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே. மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனர் வஞ்சம் கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத் தொடர்ந்தா ரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே. நாராயணு என்னுத நாவென்ன நாவே." இதனுல் பண் டைத் தமிழர் மரபு நன்கு விளங்கும்.

### 3. திகிரியோனே வேத முதல்வன் :—

இற்றைக்குச் சற்றேறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் திகழ்ந்த புலவர் பெருமானை பாரதம் பாடிய பெருந்தேவனுர் நற்றிணையில்

"மாநிலஞ் சேவடியாகத் தூநீர், வளைநரல் பௌவமுடுக்கையாக,
விசும்பு மெய்யாகத் திசை கையாகப், பசுங்கதிர்மதியமொடு
சுடர் கண்ணுக, வியன்றவெல்லாம் பயின்றகத்தடக்கிய, வேத
முதல்வனென்ப, தீதற விளங்கிய திகிரியோனே." என்கிருர்.

வேத முதல்வனுகிய திருமாலுக்கு நிலவுலகம் திருவடியாக வும் கடல் ஆடையாகவும், விசும்பு திருமேனியாகவும், திசைகள் கைகளாகவும், சந்திர சூரியர்கள் இரண்டு கண்களாகவும் அமையும். இப்படிப்பட்ட பகவான் எல்லாப் பொருள்களிலும் அந்தர்யாமி யாகப் பொருந்தியிருப்பதுடன் அவற்றைத் தன்னுள்ளும் அடக் கிக்கொண்டிருப்பன் என்பது திரண்ட பொருள். இது "பூ : பா

தௌ" என்ற ஸஹஸ்ரநாம தியான சுலோகத்தை அடியொற்றிய பாட்டென்பது அறியத்தகும்.

## 4. தமிழணங்கின் ஆபரணம்:—

தமிழன்னையின் தலைக்குச் சூளாமணி, மார்புக்குச் சிந்தாமணி, காதுக்குக் குண்டலகேசி, கைக்கு வளையாபதி, இடைக்குமணிமே கலை, காலுக்குச் சிலப்பதிகாரம் என்பாருமுளர்.

## 5. நம்மாழ்வார் மஹிமை :—

மாறனை அவயவியாகவும், மற்றையாழ்வார்களை இவருக்கு அவயவமாகவும் நிரூபிப்பது மரபு. இவருக்கு பூதத்தாழ்வாரைச் சிரமாகவும், பொய்கைபேயாழ்வார்களைக் கண்களாகவும், பெரியாழ்வாரை முகமாகவும், திருமழிசைப் பிரானைக் கழுத்தாகவும், குலசேகராழ்வாரையும் திருப்பாணாழ்வாரையும் கைகளாகவும், தொண்டரடிப்பொடியாழ்வாரை மார்பாகவும், திருமங்கையாழ்வாரைக் கொப்பூழாகவும், மதுரகவியாழ்வாரைப் பாதமாகவும் கூறுவர். இதனை விரிக்கிற்பெருகும்.

## 6. சிங்கப்பிரான் :—

எங்கும் உளன் கண்ணன் என்ற மகனைக்காய்ந்து இங்கு இல்லையால் என்று இரணியன் தூண்புடைப்ப அங்கு அப்பொழுதே அவன் வீயத்தோன்றியவனை சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே. சிங்கவேழ் குன்றத்தானே வேங்கடவெற்பன். 'பாற்கடலுளான் இரணியனதாகம் அவை செய்தரியுருவமானான்.' 'பாற்கடலும் வேங்கடமும் இடமாகக் கொண்டான்' என்பன காண்க. 'மஹா விஷ்ணும்' எகின்றது ந்ருஸிம்ஹய மந்த்ரஸ்த பதம். அத்விதீயமாய், அத்யந்த விலக்ஷணமாய், அரியுருவாகி ஏக காலத்திலே சீற்றத்தையும் அருளையும் உடையனாய்த்திகழ்ந்தான் செங்கண்மால். ஹிரண்யன் பக்கல் சீற்றத்தால் சிவந்திருக்கும். ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கல் வாத்ஸல்யத்தாலும் சிவந்திருக்கும். தெள்ளிய சிங்கமாகிய தேவைத்திருமங்கை மன்னன் கண்டது திருவல்லிக்கேணியிலே.

ப. ரா. திருமலை ஐயங்கார்.

# சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

## திருவல்லிக்கேணி.

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரெம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம். நேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந் தெடுத்த கட்டியான வெண்ணெயும் நறுமணத்த புத்துறக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வமுதாகும், சீக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்டவரும் பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு நெய் யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடை யில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக் காது. மிக்க பல முண்டாகும். நிரம்ப அறிவும் ஊறும்.

ஸ்ரீ:

# திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

**சங்க வித்வான்கள்.**

1. ஸ்ரீ உ.வே பண்டித பூஷணம் தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசார்ய ஸ்வாமி.
2. ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ உ.வே. ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி.
3. ஸ்ரீ உ.வே மு. ராகவய்யங்கார் ஸ்வாமி
4. ஸ்ரீ உ.வே. ஸ்ரீரங்கம் சடகோபாசாரிய ஸ்வாமி (மாம்பலம்).

**தலைவர்** ... ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்.

**உப தலைவர்கள்** ...

1. ஸ்ரீமான் வி. நரஸிம்மாச்சாரியாரவர்கள்.
2. ,, ஆர். சந்தானகிருஷ்ணய்யங்காரவர்கள்.
3. ,, யஸ். லக்ஷ்மி நரஸிம்மாச்சாரியாரவர்கள்.

**காரியதரிசியும், பொக்கிஷதாரரும்.** ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார்.

**கமிட்டி மெம்பர்கள்.**

1. ஸ்ரீமான் ஆர். இராமசாமி ஐயங்காரவர்கள்.
2. ,, யஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள்.
3. ,, டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
4. ,, ஏ. வெங்கடாச்சாரியாரவர்கள்.
5. ,, வி. ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
6. ,, யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
7. ,, இ. கே. சபாபதி முதலியாரவர்கள்.

**காரியாலயம்** ... 42-ஏ. வெங்கடரங்கம் பிள்ளை தெருவு, திருவல்லிக்கேணி.

**முக்கிய நோக்கங்கள்.**

1. தமிழைப் பரவச் செய்தல்
2. வாரந்தோறும் திருக்குறள் கம்பராமாயணம் முதலிய தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்தல்.
3. தமிழ்ப் பெரியார் ஜன்ம தினங்களைக் கொண்டாடல்.
4. தமிழ் வித்வான் பரீக்ஷைக்குப் போகுமவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தல்.
5. சங்கவெளியீடாக ஒருபத்திரிகை நடத்தல்.
6. பிராசீனசம்ப்ரதாய முறைகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடு செய்தல்.
7. புலவர்களைப் போற்றுதல்.
8. திருநாட்களை நன்கு கொண்டாடல்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.
காரியதரிசி.

Printed at the Lakshmi Kantha Press, 405, High Road, Triplicane and Published by P. R. Tirumalai Ayyangar, at 42-A, Venkatarangam Pillai Street, Triplicane, Madras.